**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 255 /2019 பி.வா.சா.1**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 22–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ராஜாராம் | தந்தை பெயர்: ராமையா |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>24.03.2026 முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 04.11.2020 ம் தேதியிட்ட CRLOP(MD) No. 12310/2020 மாண்புமிகு சென்னை உயர் நீதிமனற் உத்தரவு **பி.வா.சா.ஆ–8** ஆகவும்,
2. 20.09.2004 ம் தேதியிட்ட AS No. 111/2002 ன் தீர்ப்பாணை **பி.வா.சா.ஆ–9** ஆகவும்,
3. 22.09.2000 ம் தேதியிட்ட OS No. 26/98 ன் தீர்ப்பாணை **பி.வா.சா.ஆ–10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிராது தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு பி .வா.சா.ஆ–8 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தாவாச் சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான் . OS No. 26/98 பிராது, தீர்ப்புரையில் சான்றிட்ட நகல்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி பிராதில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்பது பிராதை தாக்கல் செய்தால் தான் தெரிய வரும். மேற்படி வழக்கில்எதனடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்று தீர்ப்புரையை பார்த்தால் தான் தெரிய வரும் என்றால் சரிதான்.

5. மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான் . மேற்படி வழக்கில் சர்வே எண் 95/8 சி1, 95/21 ஏ, 191/14 ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி சர்வே எண் 191/14 இவ்வழக்கில் 4 வது இலக்கச் சொத்து என்றால் சரிதான்.

6. OS No. 26/98 பிராதில் 1958 ல் எனது அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் பாகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை . மேற்படி பிராதில் தாவாச் சொத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியமில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி வழக்கில் வாதிக்கு சொத்தில் பங்கு இல்லை என்று

சொல்லவில்லை என்றால் சரிதான் . அவர் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்பதால் சொல்லவில்லை . சர்வே எண் 191/14 எனது அப்பாவிற்கும் , பெரியப்பாவிற்கும் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவாச் சொத்தில் வாதிக்கும் பாத்தியம் உள்ளது என்றால் இல்லை.

7. அ.வ எண் 26/98 வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரினேன். மேற்படி வழக்கில் வாதி அவசிய தரப்பினர் என்றாலும் அவரை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல . நானும், இவ்வழக்கு 7 முதல் 11 பிரதிவாதிகளும் கூட்டாக இருந்து மேற்படி அ.வ. எண் 26/98 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . பாகப்பிரிவினையில் எனது அப்பாவிற்கு என்னென்ன சொத்துக்கள் கிடைத்தது என்று மேற்படி வழக்கில் சொல்லவில்லை.

8. இவ்வழக்கில் நான் 2018 ல் எதிர் வழக்குரை தாக்கல் செய்து , அதில் 48 வருடத்திற்கு முன்பாக எனது அப்பாவிற்கும் , எனது பெரியப்பாவிற்கும் பாகம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். எனது அப்பாவிற்கும், எனது பெரியப்பாவிற்கும் பாகம் ஏற்படாததால் இரு வழக்கிலும் முரண்பாடாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . எனது அப்பா பெயரில் உள்ள பட்டா வை வழக்கிற்காக மோசடியாக மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ. எண் 26/98 வழக்கின் மேல் முறையீட்டு வழக்கிலும் வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான் . பி.வா.சா.ஆ–9,10 தீர்ப்புகள் வாதி தரப்பினர் இல்லை என்பதால் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.